**<u>DEPOSITION OF WITNESS</u>**

**<u>In the Court of Judicial Magistrate No.II, Mettur</u>**

**Case No : C.C. 216/2023**

**Prosecution witness : அ.சா.11** **Date : 17.11.2023**

| | |
|---|---|
| **Name : ரவிச்சந்திரன்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**<u>முதல் விசாரணை</u>**

1) நான் தற்போது மேட்டூர் நெடுஞ்சாலை ரோந்து பிரிவில் தலைமை காவலராக பணிபுரிந்த வருகிறேன். கடந்த 2022-ம் வருடம் கருமலைக்கூடல் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்தபோது, கடந்த 28.09.2022 ம் தேதி காலை 10.40 மணிக்கு மேட்டூர் அரசு மருத்துவமனை சவக்கிடங்கு முன்பாக குற்றஎண். 215/2022 சாலை விபத்து சம்மந்தமாக காவல் ஆய்வாளர் சுகுமார் என்பவருடைய உத்தரவின் பேரில் சக்திவேல் (26) என்பவருடைய பிரேதத்தை என்னிடம் ஒப்படைத்து இறப்பின் உண்மைத்தன்மையை அறியவேண்டி, சடலக்கூறாய்வு செய்தற்கு முன்பு மருத்துவர் முன்பு அடையாளம் காட்ட பணித்தார்.

2) நான் அன்றைய தினம் காலை 10.40 மணிக்கு மருத்துவர் நித்யா அவர்களிடம் சடலத்தை அடையாளம் காட்டி ஒப்படைத்து பிரேத பரிசோதனை முடிந்த பின்னர் உறவினர் வசம் நல்லடக்கம் செய்வதற்காக ஒப்படைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை-</u>**இல்லை.

ஒம்/-தே.மயில்சாமி,

**நீதித்துறை நடுவர் எண்.2,**

**மேட்டூர்.**